**அசல் வழக்கு எண். 48/2024** **தேதி-26.08.2025**

**வா.சா.1 - அப்துல் சலாம்**

**<u>1,2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் எனது தந்தையின் சொத்தான தாவா சொத்தை எனது தம்பி அவரது குழந்தைகளுக்கு தவறாக பட்டா பெயர் மாற்றம் செய்து கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் எனது பங்கை கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் பிரதிவாதிகள் என்ன கட்சி செய்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நான் தெரிந்து கொள்ளவில்லை. எனது தந்தையின் தந்தை பெயர் பிச்சையத்தார் ராவுத்தர் ஆகும். பிச்சையத்தார் எப்போது இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் சுமார் 50 ஆண்டுகள் இருக்கும். எனக்கு விவரம் தெரிந்த வயதில் தான் அவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். பிச்சையத்தாரின் மனைவியின் பெயர் ஆமின் அம்மாள் ஆகும். பிச்சையத்தாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள்,1மகள் உள்ளனர்.

2. மேற்படி மகன்கள் பெயர் முறையே முகமது யூசுப் மற்றும் ஹசன் முகமது ஆகும். மகள் பெயர் அசர் பனிஷா ஆகும். மேற்படி ஹசன் முகமது எப்போது இறந்தார் என்றால் நியாபகம் இல்லை. ஹசன் முகமதுவிற்கு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி அசர் பனிஷா எப்போது இறந்தார் என்றால் நியாபகம் இல்லை. அசர் பனிஷாவிற்கு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். வம்சாவழி பட்டியலில் பிச்சையத்தாரின் வாரிசுகளான ஹசன் முகமது மற்றும் அசர் பனிஷா ஆகியோர் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியல் தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கீழப்பகுதி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.653/5 ஆகும். சர்வே எண்.653/5 ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது.

3. எனது வழக்குரையில் கூறியுள்ளேன். சர்வே எண்.653/5 ல் எத்தனை செண்ட் நிலத்திற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 3 செண்டிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி 3 செண்டிற்கு பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை முகமது யூசுப் பெயரில் உள்ளது. வேறு யாருக்கும் உரிமை இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் அப்துல் சமது மனைவி மும்தாஜ் பேகம், ஷேக் ராவுத்தர் மக்கள் மாப்பிள்ளை மைதின், காஜா முகமது, அக்பர் அலி ஆகியோர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்திற்கும் மேற்கண்ட நபர்களுக்கும் சம்மந்தம் இல்லை. மேற்கண்ட நபர்களின் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.653/5 ல் தான் அனைவரும் இருக்கிறார்கள். கூட்டு பட்டாவாக உள்ளது. மேற்கண்ட நபர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் மும்தாஜ் பேகம், மாப்பிள்ளை மைதின் ஆகியோர் இறந்துவிட்டனர்.

4. மற்றவர்கள் உயிருடன் உள்ளனர். மேற்கண்ட நபர்களுக்கும் எனது தந்தை யூசுப் ராவுத்தருக்கும் எந்த சமயத்தில் எதன் அடிப்படையில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் அது

பற்றி தெரியவில்லை. தாவா சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்திற்கு எனது தந்தை காலத்தில் பாகப்பிரிவினை செய்து கிடைத்த மாதிரி பாகப்பிரிவினை பத்திரம் ஏதும் ஏற்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வடபுறம் யார் நிலம் உள்ளது என்றால் மும்தாஜ் பேகம் நிலம் உள்ளது. அதன் சர்வே எண் தெரியுமா என்றால் ஒரே சர்வே எண்ணில் தான் கூட்டு பட்டாவாக உள்ளது. தாவா சொத்திற்கு தென்புறம் ரோடு உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கு புறம் மாப்பிள்ளை மைதின், காஜா முகமது, அக்பர் அலி ஆகியோர் நிலம் உள்ளது. மேற்கே யார் நிலம் உள்ளது என்றால் பள்ளி வாசல் உள்ளது. நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் விழுப்புரத்தில் உள்ளேன்.

5. எந்த வருடத்திலிருந்து விழுப்புரத்தில் வசித்து வருகிறேன் என்றால் 1979 லிருந்து வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கு சென்று வந்து அதனை பராமரித்தும் வருகிறேன். 1979 லிருந்து எனக்கு குடும்ப அட்டை விழுப்புரத்தில் உள்ள முகவரிக்கு தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள ஊரில் முகவரிக்கு என் பெயரில் குடும்ப அட்டை, ஆதார் போன்ற அடையாள ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது அக்கா முகமதா பேகம் தற்போது எங்கு உள்ளார் என்றால் மணப்பாறையில் உள்ளார். எனது தம்பி 2 ம் பிரதிவாதி எங்கு உள்ளார் என்றால் சென்னை சிங்க பெருமாள் கோவிலில் உள்ளார். 3 ம் பிரதிவாதி குளித்தலையில் உள்ளார். 4 ம் பிரதிவாதி செங்கல்பட்டில் உள்ளார். 5 ம் பிரதிவாதி கரூரில்ட உள்ளார். 5 ம் பிரதிவாதிதான் எனது குடும்பத்தில் கடைசி நபர் என்றால் சரிதான்.

6. அவருக்கு சுமார் 50 வயது இருக்கும். நானும், எனது சகோதர சகோதரிகள் யாரும் தாவா சொத்தில் உள்ள ஊரில் வசிக்கவில்லை என்றால் சரிதான். அவ்வவ்போது சென்று வருவோம். எனது தாய் தந்தையர் இருந்த காலத்திலேயே எனக்கும் எனது உடன் பிறந்தவர்களுக்கும் திருமணம் நடந்துவிட்டது என்றால் சரிதான். எனது தந்தைக்கு தாவா சொத்தை தவிர மையிலம்பட்டியில் வேறு விவசாய நிலம் உள்ளதா என்றால் நியாபகம் இல்லை. எனது தந்தைக்கு திருச்சி ரோடு மையிலம் பட்டியில் சுமார் 6 ஏக்கர் நிலம் இருந்தது. அதனை நாங்கள் பராமரிக்கததால் வேறு நபர்கள் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டுவிட்டது. எனது தந்தை எங்கு இறந்தார் என்றால் வாலாஜாபாத், காஞ்சிபுரம் மாவட்டத்தில் இறந்தார். எனது தாய் எங்கு இறந்தார் என்றால் சிங்கபெருமாய் கோவிலில் இறந்தார். எனக்கும், எனது சகோதர சகோதரிகளுக்கும் இடையே மன கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரிதான். ஆனால் எனது நிலத்தை அபகரித்து விட்டார்கள். 1,3,4 ம் பிரதிவாதிகளுக்கும் எனக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை என்றால் சரிதான். ஆனால் 5 ம் பிரதிவாதியிடம் மட்டும் பேச மாட்டேன்.

**1,2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**